**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்.204/மா/2024**
**நாள் 22.11.2024**

| | | |
|---|---|---|
| திரு. சி. ஹரிபாபு,<br>சென்னை–55. | ......... | மனுதாரர் |
| ஆணையர்,<br>ஆவடி மாநகராட்சி. | ......... | எதிர்மனுதாரர் |

சென்னை–55, மிட்டணமல்லி, அரசினர் உயர்நிலைப்பள்ளி தெரு, கதவு எண்.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.சி.ஹரிபாபு என்பவரின் நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 23.09.2024–ல் பெறப்பட்டு 204/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

ஆணை

சென்னை–55, மிட்டணமல்லி, அரசினர் உயர்நிலைப்பள்ளி தெரு, கதவு எண்.21 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.சி.ஹரிபாபு என்பவர் தனது நாளிடப்படாத மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“திரு.T.H.ராஜ்மோகன், வழக்கறிஞர் அவர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் W.P.No.18846/2024 என்ற பொதுநல வழக்கில் தாக்கல் செய்துள்ள Affidavit–ன்படி ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராம சர்வே எண்.209/1–ன்படி 16.06.1942 வருடத்திய காலத்தில் 40.95 ஏக்கர் நிலம் reserved forest எனவும் 1905 Resurvey order of Assignment of land by Tahsildar Saidapet Taluk உத்தரவின்படியும் மேற்கண்ட நிலம் reserved forest ஆக உள்ளது. 20.01.1942–ல் அரசு பல நிபந்தனைகளின் அடிப்படையில் M/s. Imperial Chemical Industrial India என்ற நிறுவனத்திற்கு அரசு தொழில் நோக்கத்தின் அடிப்படையில் நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் முக்கிய நிபந்தனையாக அரசு உத்தரவினை மீறி வேறு கம்பெனிக்கு விற்பனை செய்ய தடை விதித்துள்ளது. பிற்காலத்தில் மேற்கண்ட நிறுவனம் அரசு உத்தரவினை மீறி நிலத்தினை மற்றொரு கம்பெனிக்கு மாற்றம் செய்துள்ளது. பிற்காலத்தில் சில தனி நபர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் வனத்துறை நிலம் முறைகேடாக சில தனி நபர்களுக்கு பட்டாவாக மாற்றப்பட்டது மேற்கண்ட அனைத்து விவரங்களும் திரு.T.H. ராஜ்மோகன் தாக்கல் செய்துள்ள Affidavit மூலம் முழுமையாக நீதி மன்றத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு இவ்வழக்கு உயர்நீதி

மன்றத்தில் நிலுவையில் உள்ள நிலை தெரிந்தும் ஆவடி மாநகராட்சியில் உள்ள நகரமைப்பு பிரிவு அதிகாரிகள் அவசர அவசரமாக CMDA மற்றும் ஆவடி மாநகராட்சி இரு அரசு அலுவலகத்தில் உள்ள ஊழல் அதிகாரிகள் reserved forest நிலம் என ஆவணங்கள் இருந்தும் அதை சரிபார்க்காமல் லஞ்சத்திற்காக அரசு நிலத்தினை தனியார் கம்பெனிக்கு மனை பிரிவு அனுமதி வழங்கியுள்ளனர். எனவே ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் பணிபுரியும் Assistant Engineer திருமதி.துர்காதேவி மற்றும் Assistant Executive Engineer திரு. முருகன் இருவரும் இக்கோப்பில் வழங்கிய குறிப்பினையும் முழு ஆய்வு செய்து சுமார் ரூபாய் 200 கோடி மதிப்புள்ள அரசு நிலத்தை மீட்டு எடுக்க கோரியுள்ளார்.

ஆவடி மாநகராட்சி நகரமைப்பு பிரிவில் பணிபுரியும் திரு. வி. முருகன், உதவி பொறியாளர் என்பவர் பதவி உயர்வு பெற்றதில் பல லட்சம் லஞ்சம் கொடுத்து முறைகேடாக பதவி உயர்வு பெற்று உள்ளார். மேலும் முதல் பணியில் சேர்ந்தது முதல் முறைகேடு செய்துதான் பணியில் இருந்து வருகிறார். பண்ருட்டி நகராட்சியில் பணி செய்த பொழுது அந்த நகராட்சிக்கு பல கோடி இழப்பினை ஏற்படுத்தியுள்ளார். ஆணையராக கூடுதல் பொறுப்பு வகித்த போது வருவாய் பிரிவில் வணிக வளாக கட்டிடங்களுக்கு குறைந்த அளவில் வரி விதித்துள்ளார். நகராட்சிக்கு கோடிக்கணக்கில் இழப்பீடு செய்துள்ளார். கடலூர் நகராட்சியில் பணிபுரியும் போது, அப்போது 2009–ல் கடலூர் நகராட்சி ஆணையராக இருந்த திரு.விஜயகுமார் இப்பொழுது நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குனர் பொறுப்பில் உள்ளார் இருவரும் கடலூர் நகராட்சியாக உள்ளபோது பணிபுரிந்தார்கள். அன்றைய காலகட்டத்தில் ஆத்தூர் நகராட்சியில் இருந்த திரு.முருகன் லஞ்சம் கொடுத்து 2022 முதல் 2023 திருவேற்காடு நகராட்சிக்கு விஜயகுமார் சிபாரிசு மூலம் திருவேற்காடு நகராட்சிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டார் மீண்டும் நான்கு மாத காலகட்டத்தில் பல்லாவரம் நகராட்சிக்கு பணி மாறுதல் செய்யப்பட்டார். அப்பொழுது பத்து தினங்களுக்கு முன்பு தமிழ்நாடு அரசு தாம்பரம் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்டது. நகராட்சி ஊழியராக இருந்த திரு.முருகன் அவர்களுக்கு தாம்பரம் மாநகராட்சி நகரமைப்பு பிரிவு உதவி பொறியாளராக பதவி உயர்வு வழங்கப்பட்டது. அன்றைய காலகட்டத்தில் 2022 முதல் 2023 தாம்பரம் ஆணையர் மற்றும் திருவேற்காடு நகராட்சி ஆணையர்களை விசாரணை செய்து திரு.முருகன் என்பவருக்கு வழங்கப்பட்ட பதவி உயர்வினை ரத்து செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

மனுதாரர் புகாரில் எழுப்பியுள்ள நிலம் தொடர்பான குற்றச்சாட்டு குறித்து திரு.T.H.ராஜ்மோகன் தாக்கல் செய்துள்ள Affidavit-ஐ சமர்ப்பித்துள்ளார். மேலும் இவ்வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள நிலை தெரிந்தும் ஆவடி மாநகராட்சியில் உள்ள அலுவலர்கள் அரசு நிலத்தினை தனியார் கம்பெனிக்கு மனை பிரிவு அனுமதி வழங்கியுள்ளதாக தெரிவித்து, இப்பொருள் தொடர்பான கோப்பில் ஆவடி மாநகராட்சியில் நகரமைப்பு பிரிவில் பணிபுரியும் Assistant Engineer, திருமதி.துர்காதேவி மற்றும் Assistant Executive Engineer திரு.முருகன் இருவரும் வழங்கிய குறிப்பினை முழு ஆய்வு செய்து அரசு நிலத்தை மீட்க லஞ்ச ஒழிப்பு துறை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு உத்திரவிட கோரியுள்ளார்.

மனுதாரர் சமர்ப்பித்துள்ள மனுவினை பரிசீலனை செய்யும் போது அவரது புகார் மனுவில் ஆவடி மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருமுல்லைவாயில் கிராமத்தில் உள்ள மேற்கண்ட இடம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு எண்.W.P.No.18846/2024 திரு.T.H.ராஜ்மோகன் என்ற வழக்கறிஞர் தொடர்ந்துள்ளதாக மனுதாரர் குறிப்பிட்டுள்ளார். அந்த வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதை அறிய முடிகிறது.

இம்மாதிரியான நிகழ்வுகளில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014–ல் பிரிவு 10 (3) (b)–ல் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

10 (3) The Ombudsman shall not enquire into matters relating to:-

(a) xxx

(b) any matter in respect of which an enquiry has been ordered under the commission of inquiries Act, 1952 or any matter Pending before a Court.

எனவே மேற்கண்ட சட்ட பிரிவில் தெரிவித்துள்ளபடி நீதிமன்றம் ஒன்றின் முன் நிலுவையில் உள்ள பொருட்பாடு எதனையும் இம்முறைமன்ற நடுவம் விசாரிக்கலாகாது என்பதால், இப்பொருள் தொடர்பான மேல் நடவடிக்கையை இத்துடன் முடித்து வைக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து, அவ்வாறே ஆணையிடுகிறது.

2024–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 22–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு.சி.ஹரிபாபு,
21,அரசினர் உயர்நிலைப்பள்ளி தெரு,
மிட்டணமல்லி, சென்னை–600 055.

2) ஆணையர்,
ஆவடி மாநகராட்சி. ஆவடி.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெடுஞ்சாலை
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028

4) ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்</u>:
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).